


# தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை

## மானியக் கோரிக்கை எண். 30



## எழுது பொருள் மற்றும் அச்சு

### அறிவிப்புகள் 2025–2026

# தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை

## மானியக் கோரிக்கை எண். 30

## எழுது பொருள் மற்றும் அச்சு

## அறிவிப்புகள் 2025–2026


**மு.பெ. சாமிநாதன்**

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை
அமைச்சர்

**எழுது பொருள் மற்றும்**
**அச்சுத் துறையின்**

விரைவுத்துலங்கல் குறியீடு (QR Code)

**இணையதளம்**

https://www.stationeryprinting.tn.gov.in

1. **அரசு மைய அச்சகம் மற்றும் கிளை அச்சகங்களில் பணிபுரியும் தொழில்நுட்ப அலுவலர்கள், மேற்பார்வையாளர்கள் மற்றும் தொழில்நுட்ப பணியாளர்களுக்கு அச்சுத்துறையில் அதிநவீன அச்சு தொழில்நுட்பங்கள் குறித்து திறன் மேம்பாட்டு பயிற்சி அளித்து, அச்சுப் பணிகள் மேம்படுத்தப்படும்.**

எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறையை சார்ந்த அனைத்து அரசு அச்சகங்களில் பணிபுரியும் தொழில்நுட்ப அலுவலர்கள், மேற்பார்வையாளர்கள் மற்றும் தொழில்நுட்ப பணியாளர்களுக்கு அச்சுத்துறையில் புதிய முன்னேற்றங்களை தெரிந்து கொள்வதற்கும், இத்துறையில் அச்சிடப்படும் பணிகளை உலக தரத்திற்கு இணையாக குறித்த காலத்தில் அச்சிட்டு, அரசு அச்சுப் பணித் தேவைகளை பூர்த்தி செய்திட அதிநவீன அச்சு தொழில்நுட்பங்கள், குறித்து பயிற்சி அளித்து திறன் மேம்படுத்தப்படும்.

**2. அரசு மைய அச்சகம் மற்றும் கிளை அச்சகங்களில் அச்சு மற்றும் அனுப்புகைப் பணிகள் ERP for Printing Industry எனும் மென்பொருளை பயன்படுத்தி செம்மையாக்கப்படும்.**

எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறையின் அனைத்து அச்சகங்களிலும் உள்ள பணிகளை திட்டமிட்டு / ஒருங்கிணைத்து கண்காணிக்கவும் பணிகளை குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் செயலாக்கப்பட்டு அனுப்புகை செய்வதை உறுதி செய்து அரசு மைய மற்றும் கிளை அச்சகங்களில் அச்சு மற்றும் அனுப்புதல் பணிகளை செம்மையாக மேற்கொள்ள இந்த மென்பொருளானது பயன்படும். ERP for Printing Industry எனும் இம்மென்பொருள் தமிழ்நாடு மின்ஆளுமை முகமை (TNeGA) மூலம் வடிவமைக்கப்பட்டு, இதற்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகளுடன் செயல்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.

**3. அரசிதழில் பெயர் திருத்தம் / பெயர் மாற்றம் வெளியிடுதல் உள்ளிட்ட சேவைகள் பொதுமக்களை எளிதில் சென்றடையும் வண்ணம் இணைய வழியில் மேற்கொள்ளப்படும்.**

பொது மக்களிடமிருந்து அரசிதழில் பெயர் திருத்தம், பெயர் மாற்றம் வெளியிடுதல் உள்ளிட்ட சேவைகளுக்கான விண்ணப்பங்கள், உரிய ஆவணங்கள், வெளியீட்டு கட்டணம் ஆகியவற்றுடன் இணைய வழியில் பெறப்பட்டு, இணைய வழியில் சரிபார்க்கப்பட்டு உரிய அலுவலரால் ஆணை பிறப்பிக்கப்பட்டு, முதன்முறையாக விரைவுத்துலங்கல் குறியீடு (QR Code) அங்கீகார வசதியுடன் அரசிதழில் வெளியிடப்படும். இதற்குரிய மென்பொருள் மின் ஆளுமை முகமை (TNeGA) மூலம் உருவாக்கப்படும். இந்த சேவை 2025 ஜூலை மாதம் முதல் பொது மக்களின் பயன்பாட்டிற்கு வரும்.

**4. சென்னை அரசு மைய அச்சகத்திற்கு Double Wire Binding Machine (With Calendar Hanger Device) மற்றும் Hydraulic Punching Machine ஆகியவை கொள்முதல் செய்யப்படும்.**

சென்னை அரசு மைய அச்சகத்தில், நாட்காட்டிகள் (Wire–O–Binding with Hanger) அச்சடிக்கும் பணி உள்ளிட்ட அச்சுப் பணிகளை விரைவில் மேற்கொள்ள ஏதுவாக Double Wire Binding Machine (With Calendar Hanger Device) மற்றும் Hydraulic Punching Machine ஆகியவை ரூ.19,92,430/– மதிப்பில் கொள்முதல் செய்யப்படும்.

**5. சென்னை அரசு மைய அச்சகம், அரசு கிளை அச்சகம், மதுரை, திருச்சி, புதுக்கோட்டை மற்றும் விருத்தாசலம் அலகுகளுக்கு நியூமேடிக் தண்டுகள் (Pneumatic Shaft) 20 எண்ணிக்கைகள் கொள்முதல் செய்யப்படும்.**

அரசு மைய அச்சகம், அரசு கிளை அச்சகங்களில் காவல்துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை, பொதுப்பணித் துறை, அரசுத் தேர்வுகள் இயக்ககம், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, பொதுத் (தேர்தல்கள்) துறை, பல்கலைக்கழக பணிகள், நிலைப்படுத்தப்பட்ட மற்றும் நிலைப்படுத்தப்படாத படிவங்கள் மற்றும் பதிவேடுகளை அச்சிடும் வெப் ஆப்செட் இயந்திரத்தில் காகித உருளைகளை பொருத்துவதற்கு 20 நியூமேடிக் தண்டுகள் (Pneumatic Shaft) ரூ.14,27,800/– மதிப்பில் கொள்முதல் செய்யப்படும்.

**6. சென்னை அரசு மைய அச்சகத்திற்கு Orient 2 HI–Tower–1 வெப் ஆப்செட் இயந்திரத்திற்கு Sheeter Unit கொள்முதல் செய்யப்படும்.**

சென்னை அரசு மைய அச்சகத்தில் Orient 2 HI–Tower–1 இயந்திரத்தின் மூலம் மேற்கொள்ளப்படும் கூர்நோக்குடைய பணிகளான தேர்தல் வாக்குச்சீட்டு, பல்கலைக்கழக விடைத்தாள்களின் மேலட்டை மற்றும் புவியியல் மற்றும் சுரங்கத்துறையின் e–Permit உள்ளிட்ட அச்சுப்பணிகளை சீராக அச்சிட ஏதுவாக Sheeter Unit ஒன்று ரூ.31,80,100/– மதிப்பில் கொள்முதல் செய்யப்படும்.

**7. சென்னை அரசு மைய அச்சகத்திற்கு Variable Data Printer (VDP) க்கான Drop on Demand (DOD) Piezo Inkjet System CSPL 34 AE Print Head கொள்முதல் செய்யப்படும்.**

பல்கலைக்கழக தேர்விற்குரிய விடைத்தாள்களின் மேலட்டையில் உள்ள Bar Code, Numbering போன்றவற்றை அச்சிடும் பணி, படிவங்களில் எண்கள் அச்சிடும் பணி ஆகியவற்றை செம்மையாகவும், உரிய நேரத்திலும் முடிக்க ஏதுவாக Variable Data Printer (VDP)–க்கான Drop on Demand (DOD) Piezo Inkjet System CSPL 34 AE Print Head ரூ.47,49,682/– மதிப்பில் கொள்முதல் செய்யப்படும்.

**மு.பெ. சாமிநாதன்**

தமிழ் வளர்ச்சி மற்றும்
செய்தித் துறை அமைச்சர்

# நன்றி

வடிவமைத்து அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை – 1



வடிவமைத்து அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை – 1